<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>O.S. No.87/2014</u>**

வா.சா.1 தேதி.23.01.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணகி | | |
| த/பெ. | விஸ்வநாதன் | வயது | 54 |
| தொழில் | | கிராமம் | |
| தாலுக்கா | | | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களாக 18.08.2012 தேதியிட்ட மாயூரநாதசுவாமி கோவிலார் சிவப்பிரகாசத்திற்கு கொடுத்த பகுதி ரசீது அசல் **ம.சா.ஆ.1** ஆகவும், 18.08.2012 தேதியிட்ட மாயூரநாதசுவாமி கோவிலார் சிவப்பிரகாசத்திற்கு கொடுத்த பகுதி ரசீது அசல் **ம.சா.ஆ.2** ஆகவும், 03.03.2014 வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த நோட்டீஸ் அலுவலக நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், 04.03.2014 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்த ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.4** ஆகவும், 05.03.2014 தேதியிட்ட 2ம் பிரதிவாதி கையெழுத்து செய்த ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.5** ஆகவும், 04.03.2014 தேதியிட்ட 3ம் பிரதிவாதி கையெழுத்து செய்த ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.